2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 81, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

81—

உணவு விடுதி

***27786—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி - ஒசூர் தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் உணவு விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி, ஒசூர் தேசிய நெடுஞ்சாலை எண் 7-ல் கிருஷ்ணகிரி வட்டம், போளுப்பள்ளி என்ற கிராமத்தில் சாலையோர உணவு விடுதி அமைத்திட சேலம் அரசு போக்குவரத்துக் கழகத்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.*

திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி 2007 ஆம் ஆண்டு கேட்கப்பட்ட கேள்வி. அதற்குப் பிறகு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களை நான் நேரிலே சந்தித்து இந்த மோட்டலுடைய அவசியம் குறித்து விளக்கிக் கேட்டுக் கொண்டபோது மாண்புமிகு தாயுள்ளம் கொண்ட தலைவர் கலைஞர் மற்றும் எங்களது துணை முதல்வர் தளபதியார் ஆகியோரின் உத்தரவிற்கிணங்க மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் 2008-2009 ஆம் ஆண்டினுடைய மானியக்*

2009 ஜூலை 3]

கோரிக்கை விவாதத்தின்போது இந்த உணவு விடுதியினை அறிவித்தார்கள். அறிவித்ததோடு மட்டும் நில்லாமல் முழு வேகத்தோடு அந்தப் பணியிலே இறங்கி, எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டு, போக்குவரத்துத் துறை அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு, அந்த உணவு விடுதிக்கான இடத்தையெல்லாம் தேர்வு செய்து ஆரம்பக் கட்டப் பணிகளை முடித்திருக்கிறார்கள். அந்தப் பணி விரைவிலே ஆரம்பிக்கப்படவிருக்கிறது. அந்தப் பணிக்குண்டான அடிப்படை வேலைகளெல்லாம் முடிவுற்ற நிலையிலே அந்தப் பணியை என்னுடைய கோரிக்கையை ஏற்று செய்து கொடுத்த மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு தளபதியார் அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், என் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும், நீண்ட தூரம் பயணம் செய்கின்ற அந்தப் பயணிகள் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறையிலே, போக்குவரத்துத் துறையிலே பல்வேறு சீர்திருத்தங்களை, மாற்றங்களைக் கொண்டு வந்து வெற்றி கண்டிருக்கிறது இந்த அரசு. இந்த நிலையிலே Inter-State Permit Agreement என்று சொல்லப்படுகின்ற இரு மாநிலங்களுக்கு இடையே ஓடுகின்ற போக்குவரத்திற்கான ஒப்பந்தம் புதுப்பிக்கப்படாமல் பல்லாண்டுகளாக நிலுவையிலே இருந்தது. இப்போது Inter-State Permits அதாவது ஆந்திரா-தமிழ்நாடு, கேரளா-தமிழ்நாடு, பாண்டிச்சேரி-தமிழ்நாடு போன்ற நிலைகளிலே இரு மாநிலங்களுக்கிடையேயான ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அறிகிறேன். ஆனால், அவை நடைமுறைக்கு வரவில்லையென்று சொல்கிறார்கள். அவற்றின் நிலைமை என்ன என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட காலமாக, 10 ஆண்டு காலமாக, அண்டை மாநிலங்களோடு ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்படாமல் இருந்தன.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரையை ஏற்று, அந்தந்த மாநிலங்களுக்கே சென்று அவர்களோடு பேசி, ஒப்பந்தங்கள் முடிவுற்று கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்களில் ஏற்கெனவே நம்முடைய பேருந்துகள் எவ்வளவு தூரம் ஓடியிருக்கின்றனவோ அதைவிட கேரளாவிலே 6,000 கிலோமீட்டர் கூடுதலாகவும், கர்நாடகாவிலே, என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால் 24,000 கிலோமீட்டர் கூடுதலாகவும் ஓட்ட நமக்கும் அவர்களுக்குமிடையே ஒப்பந்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆந்திர மாநிலத்தோடு ஏற்கெனவே செய்யப்பட்ட ஒப்பந்தம் வெளியிடப்படாமல் இருந்தது. இப்போது வெளியிடப்பட்டிருக்கிறது.

பாண்டிச்சேரியைத் தவிர, அத்தனை மாநிலங்களோடும் ஒப்பந்தங்கள் ஏற்பட்டு நடைமுறைக்கு வந்திருக்கின்றன. அந்தந்தப் பகுதிகளிலே, தேவைக்கேற்றபடி அண்டை மாநிலங்களுக்குப் பேருந்துகளை ஓட்டக்கூடிய அளவிற்கு இப்போது ஒப்பந்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன; நிச்சயமாக ஓட்டப்படும். பாண்டிச்சேரியுடனும் மிக விரைவிலே, இன்னும் ஓரிரு வாரங்களில், ஒப்பந்தம் உருவாகிவிடும். எனவே, Inter-State permits குறித்து 4 மாநிலங்களுக்கும் நம்முடைய தமிழ்நாட்டோடு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. விரைவிலே பேருந்துகள் விடப்படும்.

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசாமி.

திரு. கே.பி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை உள்ள தேசிய நெடுஞ்சாலை N.H. 7-ல், பல்வேறு வெளி மாநிலப் பயணிகள் எல்லாம் வந்து போகக்கூடிய அந்த வழித் தடத்திலே, கரூருக்கும், சேலத்திற்கும் இடையே ஏதாவது ஒரு இடத்திலே உணவு விடுதியை அமைக்க போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறைமூலம் பேருந்து நிலையங்களில் பணிமனைகள் உருவாக்குவது என்பது இப்போது இருக்கின்ற நிதி

2009 ஜூலை 3]

நிலைமையில் மிகவும் சிரமமாக இருக்கிறது. ஆனால், மாண்புமிரு சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கும் அத்தியாவசியத்தை முன்னிட்டு, ஆங்காங்கே ஓரிரு இடங்களிலே பணிமனைகளை இப்போது அமைத்துக்கொண்டு வருகிறோம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்குட்டுவன் அவர்கள் பெங்களூரு அருகிலே ஓர் இடத்திலே உணவு விடுதி தேவை என்று கேட்டபோது அதிகாரிகளை விட்டு ஆய்வு செய்யச் சொன்னோம். ஒரு நாளைக்கு அரசுப் பேருந்துகள் மட்டும் 900 நடைகள் அங்கு செல்கிற காரணத்தால், அந்தப் பகுதியிலே நிச்சயமாக ஒரு மோட்டல் தேவைப்படும் என்ற காரணத்தால் அங்கே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. சேலத்திற்கும், கரூருக்கும் இடையிலே மோட்டல் ஆரம்பிக்க ஆய்வு செய்து, நம்முடைய அரசுப் பேருந்துகள், தனியார் பேருந்துகள் எத்தனை நடைகள் செல்கின்றன, அருகில் ஓட்டல்கள் இருக்கின்றனவா இல்லையா என்பதை எல்லாம் ஆராய்ந்து, தேவைப்படின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அங்கு நிறுவப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக உணவு விடுதிகள் நடத்துகிறபோது, அங்கே சரியான முறையிலே உணவு வழங்கப்படுவதில்லை என்ற நிலையில் தனியாருக்கு அவற்றை ஏலம் விடுகிறோம். ஆகவே, சரியான முறையிலே உணவு வழங்குவதற்கு, தனியாகவே போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக ஒரு பொது மேலாளரை நியமித்து, வருகின்ற பயணிகளுக்குக் சிறப்பான முறையிலே உணவு வழங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை உங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்த நடைமுறை பின்பற்றப்பட்டு வருகிறது. அதற்கென்று தனி அலுவலர் இல்லையே தவிர, மேலாண்மை இயக்குநரே அதை அடிக்கடி கவனித்து, அவர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. உணவு சரியாக

இல்லையென்று சொன்னால் Tender-ஐ cancel செய்யக்கூடிய அளவிற்குக்கூட நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல யோசனையைச் சொல்லி இருக்கின்றார்கள். அதைப் பரிசீலித்து தனி அலுவலரையும் நியமிக்கக்கூடிய அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு அருகிலே மாமண்டூரிலே இருக்கும் உணவகத்தைத் தரம் உயர்த்துவதற்கு அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

செங்கல்பட்டு நகரில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதற்குக் காரணம் அங்கு இருக்கிற பணிமனைதான். இரவிலேகூட டீசல் பிடிப்பதற்காக ஏராளமான பேருந்துகள் நிற்கின்றன. எனவே, இரவிலேகூட பேருந்து நெரிசல் ஏற்படுகிறது. பகலிலும் shift மாற்றுகிறபோது அங்கே மிகப் பெரிய நெருக்கடி ஏற்படுகிறது. எனவே, அங்கிருக்கிற அந்தப் பணிமனையை பக்கத்திலே மாற்றுவதற்கான முயற்சியை அரசு எடுக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே மாமல்லபுரத்திலிருந்து திருப்பதிக்கு நேரடியாகப் பேருந்து வசதி இருந்தது. அது இப்போது நிறுத்தப்பட்டு இருக்கிறது. எனவே, ஆந்திர அரசோடு ஒப்பந்தம் புதுப்பிக்கிற இந்தச் சமயத்திலே, மாமல்லபுரத்திலிருந்து நேரடியாகத் திருப்பதிக்குப் பேருந்துகளை விடுவதற்கு அரசு முன்வருமா எனக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்குள்ள சோதனைச் சாவடி போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருப்பதால். அந்தச் சோதனைச் சாவடியை உடனடியாக மாற்ற வேண்டும் என்று சொன்னார்கள். நான் நேரடியாக வந்து இடத்தைப் பார்த்து, பின்னர் சோதனைச் சாவடியை மாற்றியமைக்கக்கூடிய பணியைச் செய்யலாம் என்று சொன்னார்கள். (குறுக்கீடு) இப்போது டெப்போ என்று சொல்கிறார். டெப்போவை மாற்றுகின்றபோது கூடுதலாகத் தொகை தேவைப்படும். செங்கல்பட்டிலே மிகப் பிரதான இடத்திலே, பேருந்து நிலையத்திறகு அருகிலேயே டெப்போ இருந்து கொண்டிருக்கிறது.

2009 ஜூலை 3]

அதை ஊரை விட்டுத் தள்ளி அமைக்க வேண்டும் என்று சொன்னால் இடம் எங்களுக்குத் தருவீர்களானால், நாங்கள் உடனடியாக அதைச் செய்வதற்குத்தயார். பேருந்துகள் அதிகமாக, அதிகமாக இடமும் தேவைப்படுகிறபடியால், நீங்கள் இடம் பார்த்துக் கொடுத்தால், மீதம் உள்ள செலவை அந்தப் போக்குவரத்துக் கழகம் ஏற்றுக்கொண்டு டெப்போவை நிச்சயமாக மாற்றலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமல்லபுரத்திற்கும் சென்னைக்கும் இடையே ஏற்கெனவே நகரப் பேருந்துகள் இல்லாமல் இருந்தது. நகரப் பேருந்து தூரம் 40 கிலோ மீட்டர் என்பதை 50 கிலோ மீட்டராக நீட்டிக்க வேண்டுமென்று, நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்தான் முதன்முதலிலே கேட்டுக்கொண்டார்கள். இன்றைக்கு சென்னை பாரிமுனையிலிருந்து மாமல்லபுரத்திற்கு நேரடியாகவே பேருந்துகளை நூற்றுக்கணக்கிலே இயக்கிக் கொண்டிருக்கிறோம். மாமல்லபுரத்திலிருந்து திருப்பதிக்குப் பேருந்து வசதி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். Inter-State permit ஒப்பந்தத்தில் எவ்வளவு கிலோ மீட்டர் நமக்கு இருக்கிறது என்பதை ஆராய்ந்து அந்த வழித்தடத்திலே ஓட்டக்கூடிய வாய்ப்பு இருக்குமானால் அதையும் நாம் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. சிவபுண்ணியம்

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலையோர உணவு விடுதிகள் குறித்து இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். தனியார் சார்பிலே ஏராளமான உணவு விடுதிகள் தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலைகளிலே இருக்கின்றன. அவற்றில் தரமான உணவு வழங்கப்படுவதில்லை. கட்டணமும் அதிகமாக வசூலிக்கப்படுகிறது. பயணிகளால் தொடர்ந்து சொல்லப்படுகிற பிரச்சினையாக இது இருக்கின்றது. இவற்றை நீங்கள் சாலையோரங்களிலே அனுமதிக்கிற காரணத்தினாலும் போக்குவரத்துத் துறைக்கு இதில் சம்பந்தம் இருக்குமென்று கருதுகிற காரணத்தினாலும் கேட்கிறேன்; அவற்றைச் சரிசெய்வதற்கும் தரமான உணவை வழங்குவதற்கும் உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா?

[2009 ஜூலை 3

தொலை தூரம் இயக்குப்படும் அரசு டீலக்ஸ் பஸ்களால், நமக்கு வருவாய் ஏற்படுமென்று 2 இருக்கைகளை 4 இருக்கைகள் கூடுதலாக்கிய காரணத்தினாலே 40 பயணிகளும் இப்போது அவஸ்தைப்படுகிறார்கள். அதேபோல நமது சட்டமன்ற விடுதியிலிருந்து இங்கு அலுவலகத்திற்கு வந்து கொண்டிருக்கிற சொகுசு தாழ்தளப் பேருந்துகளில் ஏறும் இறங்கும் வழிகளிலே, ஒரு தனி சீட் போட்டிருக்கிற காரணத்தாலே 3 பேர்கள் உட்கார முடியவில்லை. அதிலும் குறிப்பாக என்னைப் போன்றவர்கள் மிகவும் சிரமப்படுகிறோம். (சிரிப்பு) அதை நீக்குவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலையோரங்களில் தனியார் நடத்துகின்ற உணவு விடுதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு எந்தவித அதிகாரமும் நம்மிடம் இல்லை. அதனால்தான் போக்குவரத்துக் கழகங்கள் சார்பாக 100 கிலோ மீட்டருக்கு ஓர் இடத்தில் வைக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டு 2 இடங்கள் இப்போது பார்க்கப்பட்டு வருகின்றன. விருதுநகரிலிருந்து மதுரைக்கு இடையிலே ஒரு இடம் பார்க்கப்பட்டபோது நமது மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்கூட தங்கள் துறைக்குச் சொந்தமான இடத்தைத் தேர்வு செய்யுங்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள். இப்போது அங்கு புறவழிச் சாலை வந்த காரணத்தினால் மீண்டும் புறவழிச் சாலையிலே அத்தகைய இடத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். 100 கிலோ மீட்டர் இடைவெளியில் மோட்டல்கள் அமைக்கலாம் என்று இடம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நிதி கிடைப்பது சிரமம். நிதிப் பற்றாக்குறை காரணமாகத்தான் ஆய்வு, ஆய்வு என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். நிதி இருக்குமானால் 6 மாத காலத்திற்குள்ளாகவே அந்தப் பணிகள் முடிக்கப்பட்டுவிடும். இப்போது விடப்பட்டிருக்கிற Ultra Deluxe பேருந்து, சாதாரண பேருந்தைவிட 4 அடி நீளமான Chassis கொண்டது. நீங்கள் நன்றாக கவனித்தால் தெரியும், அந்த Chassis உடைய நீளம் அதிகம். அதனால்தான் அதிலே 4 இடங்கள் அதிகமாகப் போடப்பட்டிருக்கின்றன. மொத்தமே 36 இடங்கள். தனியார் பஸ்களிலே வருகின்றபோது 39 அல்லது 40 இடங்கள் மட்டும் அதிலே

2009 ஜூலை 3]

போடப்பட்டிருக்கின்றன. தங்களைப்போன்று கனமாக இருப்பவர்களுக்கு அது சிரமமாக இருக்குமானால், இப்போது சட்டமன்ற உறுப்பினர்கள் வருகின்ற பேருந்துகளில் அந்த ஒரு சீட்டை எடுத்துவிட்டு அனைவரும் நன்றாகச் சமமாக உட்காருகின்ற வகையிலே இன்றைக்கே செய்யச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 82, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

82—

ஆட்டுப் பண்ணை

***34599—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டையில் ஆட்டுப் பண்ணை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பட்டுக்கோட்டையில் ஆட்டுப் பண்ணை துவக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன்.*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை பகுதி, விவசாயத்தையே முழுவதுமாக நம்பியிருக்கக்கூடிய பகுதி ஆகும். பல்வேறு இடங்களுக்கு நான் சென்று பார்த்தபோது, நிறைய இடங்களில், குறிப்பாக சேலம், ஆத்தூர் போன்ற பகுதிகளிலே ஆடு வளர்ப்பு மிகுந்த இலாபகரமான தொழிலாக இருப்பதாகக் கூறினார்கள். அதனடிப்படையில், தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பட்டுக்கோட்டையில் இதுபோன்று ஒரு பண்ணையை அமைத்து, அதன்மூலமாக நல்ல*

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS